Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Personality expression in Salma's works

**Dr. S. Ameena Banu**, Assistant Professor, Tamil Department,
Sadakathullah Appa College, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9512-1590**
**DOI: 10.5281/zenodo.6619238**

## Abstract

*The uniqueness of human beings is not only seen in their appearance but also in the expression of their inner self. Thoughts, feelings, and behaviors can be said to be the manifestations of this kind of intimacy in human beings. We call such human qualities ethics. Such a personality is important when each individual cares about society and expresses his or her inner feelings in the way of creation and optimism. In that sense, it is the creator writer Salma who continues to write in the literary world portraying life. This article sets out to explore the personality potential that emerges through the work Irandam Jamankalin Kathai.*

**Keywords:** Salma, Personality, Study, Expression, Human, Society, Work.

.

## References

[1] M. Abdur-Rahim. *Islamic Encyclopedia*, Vol: 4, New Century Book House, Chennai.
[2] Vildurant. *A Philosophy of World Religions*, New Century Book House, Chennai.
[3] Salma. *Irandam Jamankalin Kathai*, Timeline Publication, Nagercoil, 2009.
[4] K.U.Ve., *Bala Subramaniam Purananuru* (Source and text) New Century Book House.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சல்மாவின் படைப்புகளில் ஆளுமை வெளிப்பாடு

**முனைவர் செ.ஆமினா பானு**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9512-1590
DOI: 10.5281/zenodo.6619238

**ஆய்வுச்சுருக்கம்**

*பன்முகப்பட்ட மனிதர்களின் கூட்டமைப்பை சமூகம் என்கிறோம். இத்தகைய சமூக அடுக்குகளிலுள்ள மனிதர்களை தனித்துவப்படுத்துவது அவர்களின் புறத்தோற்றம் மட்டுமல்லாது அகத்தின் வெளிப்பாடும் ஆகும். இத்தகைய அகத்தின் வெளிப்பாடாக எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் போன்றவற்றைக் கூறலாம். இத்தகைய மனிதப் பண்புகளையே ஆளுமை என்ற சொல்லால் அழைக்கிறோம். இத்தகைய ஆளுமை ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு தனது உள்ள உணர்வுகளை படைப்புகளின் வழி வெளிப்படுத்தும்போது முக்கியத்துவம் பெறுகிறது. அந்த வகையில் இலக்கிய உலகில் தொடர்ந்து தனது முன்னெடுப்பைச் செய்து வருபவர் படைப்பாளர் சல்மா. அவரின் படைப்பின் வழி வெளிப்படும் ஆளுமைத் திறனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சல்மா, ஆளுமை, படித்தல், வெளிப்பாடு, மனிதன், சமூகம், செயல்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியப் பரப்பில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய பெண்ணிய இலக்கியத்தின் எழுச்சி இருபத்தியோராம் நூற்றாண்டில் கலகக்குரலாய் ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து இலக்கியத்தை முற்றிலுமாய் விடுவிக்க முயலும் பெண்படைப்பாளர்கள் தங்களுக்கான படைப்பு வெளியைத் தங்களின் வாழ்வியல் சிக்கல்களில் இருந்தே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். கருப்பொருள் சார்ந்தும் வெளிப்பாட்டுத்திறன் சார்ந்தும் ஆண் படைப்பாளர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்ளப் பெண் படைப்பாளர்கள் முற்படுகின்றனர். பெண்களின் சமூகச் சிக்கல்கள், உளவியல் சிக்கல்கள், பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சமூகக்கூறுகள் ஆகியவற்றை மையமிட்டுப் படைப்புகளைப் படைக்கின்றனர். தற்காலப் படைப்பிலக்கியங்களில் கதைகள் வழியாகவும், கவிதைகள் வழியாகவும் பெண்ணியப் படைப்பாளர்கள் தங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது. அந்தவகையில் கதை, கவிதை எனப் பன்முகத்தளங்களில் தனது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ள இசுலாமியப் பெண் படைப்பாளரான சல்மாவின் "இரண்டாம் ஜாமங்களின் கதை" (காலச்சுவடு பதிப்பகம், 2009) புதினத்தில் வெளிப்படும் அவரின் ஆளுமைத்திறனைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

**சொல்லும் கருத்தாக்கமும்**

"ஆளுமை" என்னும் தமிழ்ச்சொல் "பெர்சனாலிட்டி" (Personality) என்னும் ஆங்கிலச்சொல் குறிக்கும் கருத்தாக்கத்தைக் குறிக்க ஏற்பட்டது. இந்தச்சொல் "பெர்சனா" என்ற இலத்தீன் சொல்லிலிருந்து உருவானதாகும். பெர்சனாலிட்டி என்ற ஆங்கிலச் சொல்லின் மொழியாக்கம்தான்

“ஆளுமை” என்ற இந்தச்சொல். இலத்தீன் மொழியில் “பர்சனா” (Persona) என்பது “மறைப்பு” என்னும் பொருள் தருவது. எனவே ஆளுமை என்பது “ஒருவர் அணிந்திருக்கும் முகமூடி” என்னும் கருத்துருவின் அடிப்படையைக் கொண்டுள்ளது.

**ஆளுமை – வரையறை**

ஆளுமை என்பதைச் சுருக்கமாக, ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் போன்றவற்றாலான ஒன்று என வரையறுக்கலாம். ஆளுமை என்பது ஒருவரது மனப்பான்மையைப் பொறுத்து அமையும். ஒரு தனிமனிதனின் அகம், புறம் ஆகியவற்றின் வெளிப்பாடே ஆளுமையாகும். அகத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமை என்பது உள்ளத்து அக உயர்வு எண்ணங்கள், ஆசை, மனதின் எழுச்சி, சிந்தனை, கற்பனைத்திறன், அன்பு, கோபம், மகிழ்ச்சி, சோகம், கனவு, இரக்கம், ஏக்கம், பொறாமை போன்றவையாகும். புறத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமையாவது பிறருடன் பழகும்முறை, அன்பு செலுத்துதல், உண்ணுதல், ஆடைஅணிதல், பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்றவையாகும். இவ்வாளுமைப் பண்புகளே ஒருவரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதாகும். இவ்வாளுமையின் வெளிப்பாடாக இலக்கியங்களையும் கணக்கில் கொள்ளலாம். இதனடிப்படையில் “சல்மாவின் ஆளுமைத்திறனை” புதினம் வழி இனங்காண்பதாய் இக்கட்டுரை முன்னகர்வடைகின்றது.

**படைப்பாளர் சல்மா**

ஒரு பெண் எழுத்தாளர் இதைமட்டுமே எழுதவேண்டும் என்று இருந்த எழுதப்படாத விதிகளை கதை, கவிதை, நாவல் என எல்லா தளங்களிலுமே உடைத்து எறிந்தவர் இசுலாமிய சமூகத்தைச் சேர்ந்த பெண் படைப்பாளர் சல்மா (எ) ரொக்கையா பீவி. திருச்சிமாவட்டம் துவரங்குறிச்சியைச் சேர்ந்தவர். துவரங்குறிச்சியைச் சேர்ந்த பொன்னம்பட்டி பேரூராட்சித் தலைவியாகவும் (Chairperson of ponnampatti town panchayat) தமிழ்நாடு சமூக நலவாரிய தலைவராகவும் (Chairperson of the tamilnadu social welfare board) இருக்கிறார். அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் “சர்வதேச பெண் அரசியல் தலைவர்கள்” என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். இவரது படைப்புகளாக ஒருமாலையும் இன்னொரு மாலையும், பச்சைதேவதை எனும் கவிதைத்தொகுப்பையும், இரண்டாம் ஜாமங்களின் கதை எனும் புதினத்தையும் எடுத்துக்காட்டலாம். ஆண்மையப் புனைவாக்க வரலாற்றைப் புறந்தள்ளி பெண்ணை மையப்படுத்திப் புனைவாக்கப்புரட்சி செய்த பெண்ணியப் படைப்பாளர்களில் சல்மாவைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சல்மாவின் ஒட்டுமொத்துப் படைப்புகளிலும் பெண்மையக் கருத்தாக்கமே மேலோங்கி உள்ளது. இதனடிப்படையில் புனைவாக்கம் பெற்ற இரண்டாம் ஜாமங்களின் கதையில் வெளிப்படும் பெண்சார்ந்தப் பதிவுகளைப் பின்வரும் தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தலாம்.

**ஆணைச் சார்ந்திருத்தல்**

தமிழ்ச்சமூக அமைப்பில் சாதி, வர்க்கம், மொழி, மதம் முதலியவற்றின் அடிப்படையில் ஒடுக்குமுறை வடிவங்கள் மிக வெளிப்படையாகவும் அதேநேரத்தில் மிகமிக நுண்ணிய தளத்திலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதேபோன்று செயல்படுகின்ற மிக இன்றியமையாத ஆற்றல் வாய்ந்த மற்றொரு தளம் ஆண்-பெண் உறவுத்தளமாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆண்மைச் சமூக அமைப்பினால் அடையாளமற்ற வாழ்வை வாழ்ந்து தீர்க்குமாறு விதிக்கப்பட்டுள்ள சமூகமாக பெண் சமூகம் விளங்குகிறது. ஒடுக்குமுறையாளர் கையாளுகின்ற முதல் தந்திரம், ஒடுக்கப்படுகின்றவர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இயங்கவிடாமல் தன்னைச்சார்ந்தே

வாழும்படியான வாழ்க்கை நிலையை நிலைநிறுத்துவதாகும். ஆண்மையச் சமூகம் பெண்களுக்கு அத்தகைய வாழ்க்கயைத்தான் வடிவமைத்துக் கொடுத்துள்ளது. குழந்தைப் பருவத்தில் இருந்து குமரியாகும் வரை தந்தை என்கிற ஆணையும், திருமணத்திற்குப் பிறகு கணவன் என்கிற ஆணையும், வயதான காலத்தில் தன் மகன் என்கிற ஆணையுமே உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்காகச் சார்ந்து வாழுகின்ற அமைப்பு நிலையே நிலவிவருகிறது. இதனை,

> **அன்று மாலை பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்து தெருவில் நின்றபடி எதையோ தின்று கொண்டிருந்த ஆமினாவை ஒரே சந்தோஷமும் பாட்டுமாக வந்த ராவுத்தர், ஏண்டி பொண்ணு இங்கெனெ அத்தாகிட்டவா என்று கூப்பிட்டார். ஏய் கத்துஜா, வா இங்கே, உம்மகளுக்குக் கல்யாணம் பேசிவிட்டு வந்திருக்கேன் ஓடிவா என்று உற்சாகமாகக் கூப்பிட்டவர் அடுப்படியை நோக்கித் தலையை எட்டிப் பார்த்துவிட்டு தன் மீசையை முறுக்கி விட்டுக்கொண்டார். (இ.ஜா.க.ப.57)**

எனும் வரிகளினூடாக சல்மா எடுத்துரைக்கிறார். இதிலிருந்து தந்தை என்கிற ஆணையும், கணவன் என்கிற ஆணையும் சார்ந்து வாழ்கிற இரண்டு பெண்களின் இருப்பை படம்பிடித்துக்காட்டியுள்ளார். தந்தையை மீறி செயல்பட இயலாத பெண்ணின் மீது பாலியத்திருமணம் திணிக்கப்படுகிறது. அதைப்போல் கணவனை மீறி செயல்பட முடியாத பெண் தன் குழந்தையின் திருமணத்தை தடுக்க இயலாத சூழலே நிலவிவருகிறது.

அதேபோல், பெண்ணின் ஒட்டுமொத்த வாழ்வியல் இயங்குதலுக்கு ஆணாகிய கணவனையே சார்ந்திருப்பதால் அவனின் எவ்வித நடவடிக்கையிலும் பெண்ணின் தலையீடு இல்லாத சூழலே சமூகத்தில் இருந்து வருகிறது. இதனை,

> **கரீம் அவளோடு நீண்ட நாட்களாகத் தொடர்பு வைத்திருக்கிறான். இவ்விஷயம் எல்லோருக்குமே தெரியும். சொஹ்ரா எவ்வளவோ சொல்லிப் பார்த்த பின் விட்டு விட்டாள். அவனுடைய போக்கை மாற்ற யாராலும் முடியாது.... தோட்டத்தையும் மாடுகளையும் ரொம்பவும் பொறுப்போடு அவள்தான் பார்த்துக்கொண்டாள்... கரீமின் தொடர்பைத் தனக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக அவள் நினைத்ததால்தான் கரீம் அவளைக் கூட்டிப்போய் கர்ப்பத்தடை செய்து வந்ததையும் அவளால் ஏற்றுக்கொள்ள முடிந்தது (இ.ஜா.க.ப.85)**

எனும் புதினவரிகள் எடுத்துரைக்கின்றன. எனவே மனைவி தன் கணவனின் தகாத உறவினையும் சகித்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதை உணரமுடிகின்றது. அதேபோல் தகாத உறவுக்கு உட்படுகின்ற பெண்ணும் ஆணின் அத்து மீறலை சகித்துக்கொள்கிற நடப்பியல் நிகழ்வு சமூகத்தில் நிலவி வருவதை அறியமுடிகிறது. இவ்வாறாக ஆணாதிக்கச் சமூகத்தில் சிக்கித் தவிக்கும் ஒட்டுமொத்தப் பெண்களின் அவலநிலையை இசுலாமியச் சமூகப் பெண்களின் வழி சல்மா வெளிப்படுத்தியுள்ளார். இப்பாங்கு படைப்பாளர் சல்மாவின் ஜனநாயக மனப்பாங்கை எடுத்துரைக்கிறது.

**வரையறுக்கப்பட்ட வெளி**

ஒடுக்குகின்றவர்கள் கையாளுகிற மற்றொரு தந்திரம் ஒடுக்கப்படுகின்றவர்களின் நடமாடும் வெளியையும் காலத்தையும் சுருக்கி எல்லைப்படுத்தி விடுகின்ற தந்திரமாகும். சிறைக்கோட்பாட்டின் அடிப்படையே இதுதான். இப்படித்தான் பெண்களும் “வீடு” என்ற எல்லைக்குள் கொண்டுவரப்பட்டனர். இத்தகைய பெண் “வெளி” சார்ந்த பதிவுகள் சல்மாவின் புதினத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை,

> **"தெருவில் பெண்கள் கூட்டம் ஒன்று குளிக்கச் செல்லும் காலடிச் சத்தத்தைக் கவனித்தாள்... இபுறாகீம் ராவுத்தர் தோட்டத்தைத் தாண்டி ஆற்றுக்குப் போவார்கள் எல்லோரும். இப்பொழுது போனால்தான் விடிவதற்குள் வீடு திரும்ப முடியும். வயதுக்கு வந்த பெண்கள் என்பதால் ஆண்களின் நடமாட்டம் துவங்குதற்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்" (இ.ஜா.க.ப.36)**

எனும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இதிலிருந்து, பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீடு செல்வதே பெண்களின் பயணமாக இருக்கும் பட்சத்தில் அவர்களின் வீதிப் பயணம் ஆண்களின் நடமாட்டம் இல்லாத பின் இரவுப் பொழுதாகவும், ஆற்றங்கரை, குளக்கரை போன்றவையே வரையறுக்கப்பட்ட வெளியாகவும் உள்ளன. பெண் உடல் சார்ந்த சமூக வரையறைகளை வரலாற்று நெடுகிலும் காணமுடிகின்றன. பொதுப்புத்தியில் சமூக சமயம் சார்ந்த இவ்வரையறைகளே பெண்களின் புழங்கு வெளிகளையும் பார்வைகளையும் கனவுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அதிலும் குறிப்பாக மணவிலக்குற்ற பெண்கள், விதவைப்பெண்களின் மீதான ஒடுக்குமுறைகள் மற்ற சமூகங்களைப் போலவே இசுலாமியச் சமூகங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதனைத் தொடர்ந்து அன்னிய ஆண்கள் வீட்டிற்குள் வரும் பொழுது வீட்டுப் பெண்கள் அந்த ஆணின் முன்பு நிற்க அனுமதி இல்லை என்ற இசுலாமிய சமூக நிகழ்வையும் புதினம் காட்சிப்படுத்தியுள்ளன. இதனை, **"இந்த ஊரில் வயதுக்கு வந்த பெண் பிள்ளைகள் வீட்டுவாசல் படியைத் தாண்டுவதே இல்லை. வெளியிலிருந்து வீட்டுக்குள் எந்த அன்னிய ஆண் வந்தாலும் அவர் முன் தலைக்காட்டக்கூடாது" (இ.ஜா.க.ப.68)** எனும் புதினவரிகள் பெண்களின்'வெளி' இல்லத்திற்குள்ளும் வரையறுக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறானப் புதினப் பதிவுகளை, வயதுக்கு வந்தவுடனேயே வீட்டில் தனது கனவுகளோடு அடைப்பட்டுப்போன படைப்பாளர்சல்மாவின் உள்மன ஏக்கத்தின் வெளிப்பாடாக உணர முடிகிறது.

**கல்வி பெறாமல் பார்த்துக்கொள்வது**

ஒடுக்குகின்றவர்கள் ஒடுக்கப்படுகின்றவர்களுக்கு விரிந்த அறிவை வழங்கும் கல்வியைப் பெறவிடாமல் பார்த்துக்கொண்டார்கள். பெண்களுக்கும் வரலாற்றில் இப்படித்தான் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு நிகழ்த்தப்படும் பெண்களுக்கு எதிரான செயல்பாடுகள் இல்லறப் பெண்களின் மூலமே முன்னெடுக்கப்படுகின்றன. இதனை, **"நல்லவேளை அம்மாவுக்குச் சொல்லாம வந்தாச்சு. இல்லெ எல்லோருக்கும் திட்டுதான். கழுதைகளுக்கு என்ன புஸ்தகம் வேண்டியதுதானே என்று கத்துவாள் என்றாள் மதினா." (இ.ஜா.க.ப.73)** எனும் புதினவரிகள் இசுலாமியப் பெண்கள் கல்விப்படிப்பை விட மதக்கல்விக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பது புலனாகிறது. இதனைத்தொடர்ந்து, **"றைமாவிடம், இப்பிடி வயசுக்கு வந்த பிள்ளைய வீட்டுல வச்சு உடம்பைத் தேத்தாம உங்கம்மா வீடுன்னு விட்டுட்டு வந்தியே, என்னா படிப்பு வேண்டிக்கிடக்கு பொட்டப்புள்ளக்கி" (இ.ஜா.க.ப.84)** எனும் வரிகளின் மூலம் பெண்களின் கல்வியைப் பெண்களே அழிப்பதை அறியமுடிகிறது.

**பலதாரமணம்**

தமிழ்ச்சமூக வரலாற்றில் தொல்காப்பியம் தொட்டு இலக்கியங்கள், புராணங்கள், மன்னர்களின் வரலாறுகள் உட்பட அனைத்து ஆவணங்களும் பலதாரமணமுறை இருந்ததற்குச் சான்றாக அமைகின்றன. இச்சான்றாதாரங்கள் பலதாரமணமுறை இசுலாமியப் பண்பாட்டிற்கு மட்டும் உரியதாகக் கருதுவதற்கு இடம்தரவில்லை. இருப்பினும் இசுலாமியச் சமயமும் அதன் தோற்றப் பின்னணியில் விதவையர், அனாதைப் பெண்கள் ஆகியோரை மையமிட்டு வரையறைக்குட்பட்டே பலதார மணமுறையை அங்கீகரிக்கிறது. ஆனால் பன்முக வாசிப்புத்தளங்களுக்கு இடம்தருகின்ற

மதநூல்கள், ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் மீதான ஒடுக்குதலுக்கு கருவியாகச் செயல்படுத்தப்படுகின்றன. இக்கருத்தாக்கங்களின் அடிப்படையிலேயே இசுலாமியச் சமூகத்தில் பலதார மணமுறை குறித்த வசனங்கள் அர்த்தப்படுத்தப்படுகின்றன. இது குறித்து,

> **பெண்களில் நீங்கள் விரும்பியவர்களை, இரண்டிரண்டாகவோ மும்மூன்றாகவோ, நான்கு நான்காகவோ நீங்கள் மணம் புரிந்து கொள்ளுங்கள் (4:3) என்று இறைவன் தன் திருமறையில் கூறியுள்ளான்… ஒன்றிற்கு மேற்பட்ட மனைவியரை மணமுடித்து அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்கி, அவர்களிடையே பாரபட்சமின்றி நடந்து கொள்ளமுடியும் என்ற திட நம்பிக்கையில்லாதவர்கள் பலதாரமணம் செய்து கொள்ளக்கூடாது என்பதும் இஸ்லாமியச் சட்டமாகும் (இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், ப.653)**

என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கும் செய்தியானது இங்கு நினைவுகூறத்தக்கது. இதன்கீழ் ஆய்வுக்குட்பட்டப் புதினமானது, “ஒனக்குச் சேதி தெரியுமா றைமா. அவனோட கடை கூட்டாளி அப்துல்லா இருக்காரே தெரியுமா சிங்கப்புர்ல என்று கேட்டாள். ஆமாம் தெரியும், மூணு கல்யாணம் பண்ணுனாரே அந்தக் கிழவன்தானே? என்றாள் றைமா… அந்தாளு நாலாவதா இப்ப ஒரு கலியாணம் பண்ண வாறானாம்… மும்தாஜ், ஆமாங்கறேன்.மூணு கட்டுனதுல ஒண்ணுகூட சாகலை. இங்கெதான் டவுன்ல இருக்காளுக. தனித்தனி வீடு கட்டி ஒவ்வொருத்தியையும் குடித்தனம் வச்சிருக்காரு… அம்புட்டும் சின்ன வயசுப் பொண்ணுக. ஏழை வீட்டுல குமருக்கா பஞ்சம்” (இ.ஜா.க.ப.237) எனும் வரிகளினூடாகவும் இசுலாமியச் சமூக நடைமுறையைப் பதிவு செய்கிறது. எனவே இசுலாமின் வரலாற்றுப் பின்புலத்தை நோக்கும்போது இசுலாமியச் சமயம் இனக்குழு சமூகத்திலேயே தோற்றம் பெறுகிறது. ஆகையால் குரானின் வேத வசனங்கள் அரபுப் பழங்குடியினரை அடியொற்றியே அமைகின்றன. அந்த வகையில் பலதார மணமுறை அப்பழங்குடியினரின் கட்டுப்பாடற்ற பாலியல் உறவுமுறையை வரன்முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட மணமுறை என்பதாக ஆய்வுநோக்கில் அடையாளங்காணலாம்.

**மணவிலக்கு**

இந்தச் செயல்பாடானது, ஆணும் பெண்ணும் தங்களது திருமண வாழ்வில் ஏற்படுகிற கருத்து முரண்பாடுகளின் காரணமாக மணவாழ்விலிருந்து விலக்கு பெறுதலையே மணவிலக்கு என்பதாகக் குறிக்கிறது. இது அனைத்துச் சமூகத்தவராலும் பொது சிவில் சட்டத்தின் கீழ் முறைப்படுத்தப்படுகிறது. ஆனால் இசுலாமியச் சமூகத்தைப் பொறுத்தளவில் 1937-இல் All India Shariath Act கொண்டு வரப்பட்டு அதன்கீழ் சொத்துரிமை, திருமணம், மணமுறிவு போன்றவை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனடிப்படையில் மணமுறிவு, தலாக் (மண விடுதலை), குல்உ (விடுவித்துக் கொள்ளுதல்) எனும் இரண்டின்கீழ் செயல்முறைப் படுத்தப்படுகிறது. கணவன் மனைவிகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளின் பொருட்டு விபரீதம் நிகழ்வதற்குமுன் தீவிரமாகச் சிந்திக்க வாய்ப்பு தந்து, அதே சமயத்தில் எளிமையான முறையிலும் செய்துவிட வாய்ப்பாகவே ’தலாக்’ இசுலாமில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, **“இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், ’தலாக்’ என்றால் மணவிடுதலை என்று பொருள். இஸ்லாம் தலாக் கூறுவதை மிகவும் வெறுக்கிறது. எனினும் நிர்பந்தமான சூழ்நிலையில் கணவனும் மனைவியும் மனம் ஒத்து வாழ முடியாது என்ற நிலை ஏற்படும்பொழுது வேறு வழியின்றி அனுமதிக்கிறது” (மேலது. தொகுதி: 3, ப.486)** என்று விளக்கம் தருகிறது. “முதல் இரண்டு மனைவிகளில் ஒருத்தி இறந்துபோய்விட இன்னொருத்திக்குப் பிள்ளை

பிறக்கவில்லை என்று தலாக்கொடுத்து அனுப்பிவிட்டார்'' (இ.ஜா.க.ப.94) எனும் வரிகளினூடாகவும் எடுத்துரைக்கிறது. இதிலிருந்து, தலாக் ஆணுக்கு மட்டுமான அதிகாரமாகவும் ஆயுதமாகவும் இருப்பதையும் அதனால் பெண் சந்திக்க வேண்டியிருக்கும் ஒட்டு மொத்தப் பாதுகாப்பின்மையையும் அவமானத்தையும் அறியமுடிகிறது. எனவே குறிப்பிட்ட கால இடைவெளியுடைய மூன்று தவணைகளில் கூறப்படும் தலாக்தான் இறுதியில் மணமுறிவிற்கு வழிவகுக்கும். மூன்றாம் தவணைக்கு இடைப்பட்ட காலத்தில் இருவரும் விரும்பினால் சேர்ந்து வாழலாம். மணவிலக்குப் பெற விரும்பும் தம்பதிகளின் இருவீட்டாரும் சமரசம் செய்துவைக்க முயற்சி செய்ய வேண்டும். தலாக் சொல்வது சாட்சிகளுக்கு முன்பு நடைபெற வேண்டும் என்பது போன்ற பல நிபந்தனைகள் இசுலாமியச் சட்டத்தில் உள்ளன. இசுலாமியச் சட்டம் இவ்வாறாக இருக்க தலாக் என்ற சொல்லை மூன்றே மூன்று முறை ஒரே இடத்தில் நின்று ஒருசில நிமிடங்களில் கூறிவிட்டு எவ்விதக் குற்றவுணர்வுமின்றி வெளியேறிவிடுகிற ஆணாதிக்கச் சமூகத்தின் சமயக்கொள்கை மீறலை நடப்பியலில் அறியமுடிகிறது.

**குடும்பக் கட்டுப்பாடு**

எந்தச் சமயமும் தன் வளர்ச்சியைத் தானே கட்டுப்படுத்துவதில்லை. அதனடிப்படையில் இசுலாமியச்சமயமும் குடும்பக்கட்டுப்பாட்டை அனுமதிக்கவில்லை. கருத்தடைச் செய்வது பெரிய பாவமாக இசுலாமியச் சமயத்தில் கருதப்படுகிறது. இதன்காரணமாகவே, கருத்தடை செய்பவன் இறைவனின் அருட்கொடைகளை மறுக்கின்ற ஒரு இறைமறுப்பாளனாகச் சமூகத்தால் அடையாளங்காணப்படுகின்றான். இதனை,

> **"இடைக்காலக் கிறித்துவர்கள் அல்லது கடுஞ்சீர்திருத்தச் சமயவாதிகள் மிக அதிகமான குழந்தை உற்பத்தியை வரவேற்றார்கள். நீங்கள் கட்டற்ற விபரீத ஒழுக்கம் என்று கருதக்கூடிய காதலையும் ஒளிவு மறைவற்ற காமத்தையும் அவர்கள் வழிபட்டார்கள்" (உலக மதங்கள் ஒரு தத்துவப்பார்வை, ப.29)**

என்று வில்டியுரன்ட் எடுத்துரைக்கும் செய்தியின் மூலம் அனைத்துச் சமயங்களும் குழந்தை உற்பத்தியை அதிகரித்தது புலனாகிறது. இதன்கீழ் ஆய்வுக்குட்பட்டப் புதினமானது, "சைத்தூனுக்குஏற்கனவே ஆறுபிள்ளைகள். இது ஏழாவது ஏன் இப்புடி வருஷத்துக்கொரு புள்ளையப் பெத்துக்கிட்டு ஒடம்ப வீணாக்குற சைத்தூனு? மன வருத்தத்துடன் கேட்டாள் ஹைமா... என்ன கேட்டே, ஏன் புள்ளை பெக்கிறன்னா, என்னா செய்யச் சொல்லுற? இவுகளுக்கு நான் கர்ப்பத்தடை செய்யக் கூடாதாம். அல்லாவுடைய கோபத்துக்கு ஆளாக வேண்டிவருமாம்... பிள்ளை அல்லா குடுக்கறது, பரக்கத் அதைக் கட்டுப்படுத்துறது பெரிய பாவமுன்னு ஷரியத் சொல்றாரு, ஹதீஸ் சொல்றாரு. பட்டுத் தவிக்கிறது யாரு, ஆம்பளையா பொட்டச்சிதானே'' (இ.ஜா.க.ப.222) எனும் வரிகளினூடாக புலப்படுத்துகிறது. இவ்வாறாக, ஆணாதிக்கச் சமூகம் சமயத்தின் வாயிலாகவே தன் அதிகாரத்தைச் செயல்படுத்துகிறது.

**முடிவுரை**

வரலாறு நெடுகிலும் ஆண்கள் தங்களை மையப்படுத்திப் பெண்பாலை முன்னிலையாக நிறுத்திப் புனைவதுதான் மரபாக இருந்து வந்துள்ளது. இதை அப்படியே "தலைகீழாக மாற்றுதல்'' என்ற பின் நவீனத்துவக் கோட்பாட்டைப் பயன்படுத்திப் பெண்களை முதன்மைப்படுத்தி ஆண்களை முன்னிலையாக வைத்துப் படைக்கும் பெண்ணியப் படைப்பாளர்களில் சல்மாவிற்கே முதலிடம் என்று சொல்லலாம். அந்த வகையில் இசுலாமியச் சமூகம் பெண்ணுக்கு வைத்துள்ள வரையறைகளை தமது படைப்பின் வழி காட்சிப்படுத்தியுள்ள சல்மாவின் ஆளுமைத்திறனை கண்டறிய முடிந்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

[1] மு.அப்துற்-றஹீம். *இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்*, தொகுதி 4, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

[2] மேலது. தொகுதி: 3, ப.486.

[3] வில்டியுரன்ட். *உலக மதங்கள் ஒரு தத்துவப்பார்வை*, நியு செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

[4] சல்மா. *இரண்டாம் ஜாமங்களின் கதை*, காலச்சுவடு வெளியீடு, நாகர்கோவில், 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.